கிறுர்கள். அந்த வேலை சம்பந்தப்பட்ட ஜப்பான் நிபுணர்கள் இந்த உண்மையைத் தெரிவித்திருக்கிறுர்கள். ஸ்ப்ரேயர்களை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

SRI T. SAMPATH : பிரஸ்தாப நான்கு தாலூகாக்களில் மட்டும் எப்போதும் பூச்சி நோய் வருவதற்குக் காரணம் என்ன ? பயிர் களுக்குப் பூச்சி நோய் வருவதற்கான காரணங்களை அரசாங்கம் கண்டு பிடித்திருக்கிறதா ? அதற்கான ஆராய்ச்சியை அரசாங்கம் செய்திருக் கிறதா ? செய்திருந்தால், பயிர்களுக்குப் பூச்சி நோய் வருவதை நிரந்தர மாகத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்யப்போகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தாலூகாக்களில் தான் பயிர்களுக்குப் பூச்சி நோய்கள் வருகின்றன என்பது சரியல்ல. அந்தத் தாலூகாக்களைப்பற்றி மட்டுமே மூலக் கேள்வியில் கேட்கப்பட்டிருந் தால், அவைகளில் பயிர்களுக்கு பூச்சி நோய்கள் வருகின்றன என்று சொன்னேன். மற்ற தாலூகாக்களிலும் பயிர்களுக்கு பூச்சி நோய்கள் வருகின்றன. அந்த நோய்களின் பெயர்கள் என்னவென்ருல் stem borer, green jassid, fulgorid, rice mealy bug, field rates இந்த நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : ரசாயன உரங்களை அளவிற்கு மிஞ்சிப் போடுவதால் பயிர்கள் பூச்சிகளுக்கு அதிகமாக இரையாகின்றன என்பது உண்மை தானு ? ரசாயன உரங் களை கிரகித்துக்கொள்வதால், பயிர்களுக்குப் பூச்சி நோய்களை எதிர்க்கும் சக்தி குறைகிறது என்பது உண்மை தானு ? அப்படியானுல் இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறுர் கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உற்பத்தியை அதிகரிப் பதற்கு ரசாயன உரங்களைப் போட வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்து வருகிறது. ரசாயன உரங்களை கிரகித்துக்கொள்ளும் பயிர்களுக்கு நோய் களை எதிர்க்கும் சக்தி குறைகிறது என்ற மற்ருெரு கருத்தும் நிலவுகிறது. ஒன்றுக்கொன்று முரணை இந்த இரண்டு கருத்துக்களும் " கல்யாணம் பண்ணினுல் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால் தான் கல்யாணம் பண்ணலாம் " என்ற கருத்துக்களைப் போல் இருக்கின்றன. (சிரிப்பு). உற்பத்தியை அதிகரிப்பதற்கு எல்லா ரசாயன உரங்களையும் போட வேண்டியதில்லை. தகுந்த ரசாயன உரங்களைப் போடலாம். ரசாயன உரங்களைப் போடுவதன் விளைவாக பயிர்களுக்கு பூச்சி நோய்கள் வந்தால், அப்போது அந்த நோய்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

MR. SPEAKER : இந்தக் கேள்விக்குப் பல உப கேள்விகள் போடப்பட்டுவிட்டன. இன்னும் பல கேள்விகள் போடப்பட வேண்டியிருக் கின்றன. ஆகவே இந்தக் கேள்விக்கான உப கேள்விகள் இத்துடன் முடியட்டும். அடுத்த கேள்வியை எடுத்துக்கொள்வோம்.

Export of hides and skins

* 790-A *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1951 முதல் 1957-வது ஆண்டு வரை நமது இராஜ்யத்தி லிருந்து—

(1) என்னென்ன

(2) எவ்வளவு மதிப்புள்ள

(3) எந்தெந்த நாடுகளுக்கு தோல் ஏற்றுமதி ஆகிறது ?

[1st November 1958

(ஆ) அதில், பதனிட்ட தோல்; பதனிடாத தோல் எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: நம் ராஜ்யத்தில் 600 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருந்தாலும், அவைகளில் 1/3 பங்காகிய 200 தொழிற்சாலைகளே இயங்கி வருவதற்குக் காரணம், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தோல் எல்லாம் மற்ற ராஜ்யங்களிலிருந்தே ஏற்றுமதியாவது தான்.

MR. SPEAKER: காரணம் உங்களுக்குத் தெரிந்திருந்தால் நீங்கள் ஏன் உப கேள்வி போடவேண்டும்? கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள். ஏனென்றால் இது கேள்வி நேரம். பல கேள்விகள் இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: However, I may give this information, Sir.

There has been general increase in the export of tanned leather during the period from 1952–53 to 1955–56 due to good demand in the United Kingdom. In 1956–57, the export declined sharply due to the following reasons:

(*a*) poor demand from the United States of America;

(*b*) release of stock held by Government in United Kingdom;

(*c*) keen competition of Indian Chrome Leather rubber, synthetics resulting in a fall in demand from overseas markets;

(*d*) good demand for inferior varieties of tanned leather in local markets.

The general fall in the export of untanned leather during 1952–53 to 1956–57 except for the increase in export in 1954–55 is attributed to good demand from local tanners. In 1954–55, however, there was keen demand from Australia, New Zealand and Western Germany and as a result, exports recorded an increase during that year.

SRI V. K. KOTHANDARAMAN: வெளிநாடுகளுக்கு அனுப்பப் படும் தோல் நம் ராஜ்யத்திலிருந்து சென்றால் நமக்கு 3 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் தோல் இந்த ராஜ்யத்திலிருந்து அனுப்பப்பட வேண்டுமென்று மத்திய சர்க்கா ருக்கு வற்புறுத்தி இந்த ராஜ்யத்தில் இந்த தொழிலை அபிவிருத்தி செய்ய ராஜ்ய சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதை நாம் மத்திய சர்க்காருக்கு ஏன் வற்புறுத்த வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை.

SRI N. MARUDACHALAM: தோல் தொழில் நிபுணர்கள் இந்தியா பூராவும் ஆராய்ந்து திண்டுக்கல், கோவை போன்ற முக்கியமான இடங்கள் தான் தோல் தொழிலுக்கு உகந்த இடங்கள் என்று அரசாங்கத் திற்கு சிபார்சு செய்திருக்கிறார்களா? அதன் மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

---

[a] Printed as Appendix V on pages 370–374 infra.

1st November 1958]

SRI A. VEDARATHNAM : அன்னிய நாடுகளில், ரஷ்யா போன்ற யிடங்களில் " பினிஷ்ட் சூட்ஸ் " க்கு நிரம்ப கிராக்கி இருக்கிறபடியால் எதற்காக " ரா ஸ்கின்"யை ஏற்றுமதி செய்யவேண்டுமென்று கேட்கிறேன். ஆகவே அரசாங்க பாக்டரிகள் மூலம் " பினிஷ்ட் ஆர்ட்டிகிள்ஸ் " யை அனுப்ப அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு அதையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இருந்தாலும் இந்த ஏற்றுமதியையும் பாதிக்கச் செய்வது சரியல்ல.

SRI A. A. RASHEED Sir, is the Minister aware that due to large exports of raw skins to Australia and other countries, our South Indian tanneries are depleted of the raw skins and if so, will the Government recommend to the Government of India that if they cannot completely ban the export of the skins, they should at least levy a cess on the export of such raw skins ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if the hon. Member puts a separate question, I shall look into it.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு நம்மிடம் அதிக உற்பத்தியிருக்கிற போது வெளிநாடுகளில் இருந்து சிலவகைத் தோல்களை நாம் இறக்குமதி செய்யவேண்டியதன் அவசியம் என்ன ? அதற்கு காரணமென்ன ? அந்தத் தோல்களை நமக்கு தேவையான முறையில் இங்கே நாமே மாற்றி அமைத்துக்கொள்ள ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில தோல்கள் நமக்கு வேண்டியிருக்கிறது நம் தொழிலுக்கு. ஆகவே அவைகளை இறக்குமதி செய்வதைத் தவிர்ப்பதற்கு இல்லை.

SRI M. JAGANNATHAN : Sir, may I know whether there is any foreign demand for the skins of reptiles particularly for the skins of snakes like the cobras ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. There is very great demand for them. But we have first to look to our requirements.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : நம்முடைய அன்னிய செலாவணிக்கு மிகவும் நஷ்டம் இருக்கிற இந்த நாளில் ஹைட்ஸ்-ஐ வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். சின்னச் சின்ன துண்டுகளை இறக்குமதி செய்கிறோம். அவை " கஞ் " செய்ய நல்லது என்று சொல்லப்படு கிறது. அதை நாமே இங்கு செய்யக்கூடாதா ? அதற்கு ஏன் நாம் நமது அன்னிய செலாவணியை அனுவசியமாகச் செலவு செய்யவேண்டும், அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இறக்குமதியை எந்தளவு தவிர்க்க முடியுமோ அந்தளவு அதில் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது, ஆனால், ஓரளவு நாம் சில பொருள்களை இறக்குமதி செய்வதின் மூலம் நமது ஏற்றுமதியும் அதிகப்படும்.